**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC.130 /2019**

**Deposition of P.W. 2**

| | | |
|---|---|---|
| Name | : | ரெஜி |
| S/o, D/o, W/o | : | ஜஸ்டின் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 18.09.2024**

**Accused Present.**

**முதல் விசாரணை–**

நான் பெருஞ்சிலம்பு, விழாபுறத்தில் வசித்து வருகிறேன். நான் பால்வெட்டும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ எனக்குத் தெரியும். ஆஜர் எதிரியையும் தெரியும். நான் 14.01.2018ம் தேதி மாலை 06.45 மணிக்கு பெருஞ்சிலம்பிலிருந்து – விழாப்புறத்தில் என் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்த போது பெருஞ்சிலம்பிலிருந்து அ.சா.1 சந்திரசேகர் எனது வாகனத்தில் ஏறி வந்தார். சடையாரில் வைத்து எதிரி நாங்கள் வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி அரிவாளை எடுத்து சந்திரசேகரை வெட்டினார். சந்திரசேகருக்கு இடது முழங்கையின் அருகே காயம் ஏற்பட்டது. பிறகு அவரை ஆட்டோவில் ஏற்றி தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து போனோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சடையாற்று பாலத்தில் வைத்து சம்பவம் நடந்தது என்றால் சரிதான்.

சடையாற்று பாலத்திற்கும், சந்திரசேகர் வீட்டிற்கும் ½ கி.மீ தொலைவிற்கு இருக்கும். சம்பவம் நடப்பதற்கு முன்னர் சந்திரசேகர் உடம்பில் புதுக்காயங்களை நான் பார்க்கவில்லை. சந்திரசேகரனுடன் நானும் மருத்துவமனைக்கு உடன் சென்றேன். காயம்பட்ட பிறகு சந்திரசேகர் வீட்டிற்கு சென்று அவரது மனைவியிடம் பேசவில்லை. சம்பவத்திற்கு பிறகு எதிரி இருசக்கர வாகனத்தை எடுத்து சென்று விட்டார். போாசார் என்னை சம்பவ நாளன்று மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னை ஆய்வாளர் விசாரித்தாரா, உதவி ஆய்வாளர் விசாரித்தாரா என்று எனக்குத் தெரியாது. சந்திரசேகர் எனது வாகனத்தில் வரும் போது வீட்டிற்கு சாதனம் வாங்கி வந்தார். சம்பவம் இடத்தில் சந்திரசேகர் வாங்கி வந்த ஜாமான்கள் விழுந்தது என்றால் விழுந்திருக்கும் அது பற்றி எனக்குத் தெரியாது. சம்பவத்தை தர்மராஜ் என்பவர் பார்த்தார் அவர் தற்போது இறந்து விட்டார். போலீசார் விசாரணையில் சம்பவத்தை பார்த்த நபர்களாக வேறு யாரையும் நான் சொல்லவில்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. கொற்றிக்கோடு போலீசார் எதிரியை கைது செய்து அடித்து காயப்படுத்திவிட்டு எதிரி வழக்கு போட்டுவிடுவார்என்று பயந்து சந்திரசேகரிடம் பொய்யான புகார் பெற்று சந்திரசேகரால் அவருக்கு உருவாக்கப்பட்ட காயத்தை வைத்து போடப்பட்ட பொய் வழக்கில் என்னை போன்ற நண்பர்களை சாட்சியாக காட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**Deposition of P.W. 3**

Name : ரவிராஜசேகர்
S/o, D/o, W/o : தங்கப்பன்
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated: 18.09.2024**
**Accused Present.**

முதல் விசாரணை—

நான் பருஞ்சிலம்பு நெடும்பாறைவிளையில் வசித்து வருகிறேன் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ எனக்குத் தெரியும் ஆஜர் எதிரியை தெரியும். நானும் தர்மராஜ் என்பவரும் ஆற்றில்குறிப்பதற்காக சடையாறுக்கு 14.01.2018ம் தேதி 06.45 மணிக்கு வந்தோம். சந்திரசேகரரும், ரெஜியும் பைக்கில் சென்று கொண்டிருந்தார்கள். எதிரி சந்திரசேகர் சென்ற இருசக்கர வாகனத்தை மிதித்து தள்ளி அவர்களுக்குள் கை கலப்பு நடந்தது. எதிரி அருவாளை எடுத்து வீசியதில் சந்திரசேகரருக்கு இடது கையில் காயம் பட்டது. நிறைய ஆட்கள் கூடியதும் எதிரி இருசக்கர வாகனத்தை எடுத்து சென்று விட்டார். காயம்பட்ட சந்திரசேகரை ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் என்னை சம்பவத்திற்கு 2 நாட்கள் கழித்து விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள். சந்திரசேகர் புகார் கொடுத்த வழக்குகளில்

நான் சாட்சியாக உள்ளேன் என்றால் இதற்கு முன்னர் ஒரு வழக்கில் சாட்சி கூறியுள்ளேன். அந்த வழக்குகள் அனைத்தும் விடுதலை ஆகி விட்டது என்றால் எனக்குத் தெரியாது. ஆண்டு பட்டிகை வழக்கு எண்.223/2023 வழக்கில் நான் சாட்சி என்றால் சரிதான். அந்த வழக்கு சம்பவத்தையும் பார்த்தேன். சம்பவத்திற்கு பிறகு சந்திரசேகர் வீட்டிற்கு செல்லவில்லை. மருத்துவமனைக்கு போனார். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. கொற்றிக்கோடு போலீசார் எதிரியை காவல்நிலையத்தில் வைத்து கடுமையாக தாக்கி அதிலிருந்து தப்பிப்பதற்காக சந்திரசேகரனிடமிருந்து பொய்யான புகார் பெற்று பதிவு செய்யப்பட்ட வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சந்திரசேகரால் கொடுக்கப்படும் பொய் வழக்குகளில் நான் நிரந்தர சாட்சி என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.